1970 ஆகஸ்ட் 25]

சாதாரணமாக குழாய்கள் பொருத்துவதற்கெனத் தேவைப்படும் 20 மி.மீ. முதல் 200 மி.மீ. வரை விட்டம் உள்ள 'வெட்டு வாயில்லாத உருக்குக் குழாய்களை' இத் தொழிற்சாலை தயாரிக்கும். இந்த செயல்திட்டத்திற்காக ரூ. 18 கோடி அளவிற்கு மூலதனம் தேவைப்படும் என்று எதிர்பார்க்கபடுகிறது.

தமிழ் நாட்டில் புதிய சர்க்கரை ஆலைகள்

* வினு 15. திரு. கொளத்தூர் கோதண்டம்:

திரு. என். எஸ். வி. சித்தன்:

திரு. வை. சுவாமிநாதன்:

திரு. ஆர். கருப்பையா

மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1969-70, 1970-71 ஆண்டுகளில் தமிழகத்தில் புதிதாக எத்தனை சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1969-70-ல் மத்திய அரசு இரண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கு இரண்டு அதிகாரம் பத்திரங்களை வழங்கியிருக்கிறது. 1970-71 மற்றுமொரு ஆலைக்கு வேண்டிய அதிகாரப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, தற்போது இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி அதிகமாகி, சர்க்கரை அதிகமாகத் தேங்கிக் கிடப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இன்னும் புதியதாக ஆலைகளை ஏற்படுத்தி அதனுல் வருகிற சர்க்கரையை எப்படி விற்பது என்று அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது 'ஷுகர் சர்ப்ளஸ்' இடைக் காலத்தில் ஏற்பட்டது உண்மை. அது நிரந்தரமான சர்ப்ளசாக இருக்காது என்று நாங்கள் கருதுகிறோம். இன்னும் ஏராளமாக நம்முடைய நாட்டில் உபயோகப்படுத்துவதற்கும், பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் வாய்ப்பு இருப்பதினுல், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இன்னும் அதிக சர்க்கரை ஆலைகள் ஆரம்பிப்பதில் தவறு இல்லை என்று இந்த அரசாங்கம் கருதுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: 1969-70-ல் இரண்டு ஆலைகளும், 1970-71-ல் ஒரு ஆலையும் ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவைகளில் உற்பத்தி தொடங்கப்பட்டுவிட்டதா? தொடங்கவில்லை என்ருல், எப்பொழுது தொடங்கப்படும்? தற்பொழுது தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் கரும்பு சர்க்கரை ஆலைகளுக்குப் போதுமானதாக இருக்கிறதா? அல்லது அதிகமாக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒவ்வொரு ஆலைக்கும் தேவையான கரும்பு உற்பத்தி அந்தந்தப் பகுதியில் நிர்ணயிக்கப்படுகிறது எத்தனை ஏக்கரா நிலங்கள் என்று. இரண்டு வட ஆற்காடு மாவட்டத்திலும், ஒன்று கோவை மாவட்டத்திலும், ஆக மூன்று ஆலைகளைப் பொறுத்தவரையிலும் அவைகளுக்கான ஏக்கர்கள் எத்தனை, இடம் எது எது என்று நிர்ணயிக்கப்படுகிறது. மூன்று இடங்களில், இரண்டு இடங்களுக்கு அதற்கான தலைவர்களைப் போட்டு, அவர்களும் நிதியைச் சேர்த்து, தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இறுதி முடிவு செய்யப்படும். கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் இப்பொழுதுதான் பேரூரில் ஆரம்பிக்கலாம் என்று லெட்டர் ஆஃப் இன்டெண்ட் நமக்குகொடுத்திருக்கிறார்கள். இதற்குப் பின்னாலே அங்கும் மக்கள் பிரதிநிதிகளை அமைத்து அவர்கள் கூட்டுறவுத் துறையில் இதை ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்படுகிறது.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இதை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசாங்கம் எவ்வளவு பணம் உதவுகிறது, மாநில அரசாங்கம் எவ்வளவு பணம் உதவுகிறது, தனியார் எவ்வளவு கொடுக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தொடங்குகிறோம். தொடங்கி பணமெல்லாம் சேர்க்கும்பொழுது யார் எவ்வளவு போடுவது என்று முடிவு தெரியும்.

திரு. ஆர். கருப்பையா: புதியதாகத் தொடங்கப்படுகிற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை எந்தெந்த இடங்களில் தொடங்குவது என்று முடிவு செய்யப்பட்டதா? திருச்சி மாவட்டத்தில் அரியலூர் கோட்டத்தில் பெரம்பலூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஏற்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்களே, அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அந்த ஆலையை எப்பொழுது தொடங்குவது என்று அரசாங்கம் எண்ணம் வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதுதான் அதிகமாக சர்க்கரை ஆலைகள் தொடங்கப்படவேண்டுமா என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டது. திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர் பகுதியில் அரசாங்க தலைமைக் கொறடா திரு. அழகமுத்து அவர்கள் ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப்படவேண்டும் என்று அரசாங்கத்தினிடம் அடிக்கடி வற்புறுத்தி வருகிறார். இப்பொழுது சர்க்கரை மிகுதியாக இருக்கக்கூடிய சூழ்நிலையில் நாம் ஆரம்பிக்கலாமா என்பது சந்தேகம்தான். இப்பொழுது மூன்று ஆலைகள் ஆரம்பித்த பின்னர் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

1970 ஆகஸ்ட் 25]

திரு. தோ. மு. நல்லசாமி: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டினுடைய நிலைமைக்கு மாறாக, இந்த ஆண்டு கரும்பு பயிரிடப்படுவது அடுத்த அறவை ஆண்டுக்கு தமிழகத்தில் உள்ள அத்தனை ஆலைகளுக்கும் தேவையான அளவு பயிரிடப்படவில்லை. அதனால் அடுத்த ஆண்டில் அறவை நிலை பாதிக்கப்படுகின்ற நிலையை ஆலைகளை வைத்திருக்கும் முதலாளிகள் அல்லது கூட்டுறவு ஸ்தாபனத்திலுள்ள நிர்வாகஸ்தர்கள் உணருகின்றார்கள். அந்த நிலைமை அரசாங்கத்திற்குத் தெரியுமா? இந்த நிலைமை இருக்கும்பொழுது மீண்டும் சர்க்கரை ஆலைகள் திறப்பது பற்றி 'ரீ-திங்கிங்', புனராலோசனை தேவையில்லையா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முன்னால் விளக்கியபடி ஒவ்வொரு ஆலைக்கும் எந்தெந்தப் பகுதிகளில் எத்தனை எத்தனை ஏக்கர்கள் நிலத்தில் கரும்பு பயிரிடப்படும் என்று பதிவு செய்யப்படுகின்றது. அந்தந்த ஆலைக்கு பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் கட்டாயம் கரும்பு கொடுக்கவேண்டுமென்ற விதிகள் இருக்கின்றன. கரும்பு விலைக் குறைவும், சர்க்கரை ஆலைகளில் சில தகராறுகள் ஏற்படுகிற காரணத்தினாலும் ஆங்காங்கு உள்ள விவசாயிகள் தயக்கம் காட்டுகிறார்கள். கூட்டுறவு ஆலையானாலும் சரி, தனியார் ஆலையானாலும் சரி, அவர்களோடு இணைக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளோடு தொடர்பு கொண்டு, அவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான அளவுக்கு விலையைக் கொடுப்பதற்கும், உற்பத்தி செய்த கரும்பை தகராறு காரணமாக தேக்கம் இல்லாமல் அறைத்துக் கொடுப்பதற்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

வள்ளியூரில் சிமெண்ட் தொழிற்சாலை

*15. **வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதா?

(இ) ஆமெனில், ஆலை நிறுவும் திட்டம் தற்போது என்ன நிலைமையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம். தனியார் துறை தொழிலதிபர் ஒருவருக்கு 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நான்குனேரியில் ஆண்டொன்றுக்கு 52,000 டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்று நிறுவ பூர்வாங்க அனுமதி வழங்கப்பட்டது.

(இ) ஆலை நிறுவும் திட்டம் தொழிலதிபரால் கைவிடப்பட்டது.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: 1965-ல் தனியாருக்கு இதற்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது; அது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. வள்ளியூர் தொழில் துறையிலே, தொழில் அபிவிருத்தி